

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை
கலை இலக்கிய மேம்பாட்டுச் சங்கம்

சிறந்த எழுத்தாளர்களுக்கான நிதி உதவி வழங்கும் திட்டம்

பாராட்டுச் சான்றிதழ்

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மேம்பாட்டிற்கான படைப்புகளை உருவாக்கிடும் எழுத்தாளர்களை ஊக்குவிக்கும் நோக்கத்துடன் அவர்களின் படைப்பினை நூலாக வெளியிடுவதற்கு ரூ. 40,000/- நிதியுதவி வழங்கும் திட்டத்தின் கீழ் 2017 - 2018 ஆம் ஆண்டில் சிறந்த படைப்பாக தெரிவு செய்யப்பட்ட **'தமிழக அருந்ததியர் வரலாறும் வாழ்வும் '** என்னும் படைப்பு நூலாக வெளியிடுவதற்கு தெரிவு செய்யப்பட்டு **இந்து சக்கிலியன்** நூலாசிரியரான **திரு.ச.சீனிவாசன்** அவர்களுக்கு இப்பாராட்டுச் சான்றிதழ் வழங்கப்படுகிறது.

அரசு கூடுதல் தலைமைச் செயலர்
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை
தலைமைச் செயலகம், சென்னை - 9

மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர்
நலத்துறை அமைச்சர்
தமிழ்நாடு அரசு

The Book **"The Life and History of Arunthathiyar of Tamil Nadu : An Ethnographic study "** by **Dr.S.Seenivasan , Associate Professor of Tamil , Sri Venkateswara College, New Delhi-21** has been recognized by the Govt. of Tamil Nadu as the Research work for the year 2017- 2018 and he have been selected as "**Best Author"** for the same.

The Govt. of Tamil Nadu has awarded an Appreciation Certificate and a Cash price of Rs.40,000/- to publish the book at an Award Ceremony, arranged in the Tamil Nadu House, New Delhi, on 24.11.2020.

Dr.S.Seenivasan was honored to receive the Appreciation Certificate from Hon'ble Mr. Hitesh Kumar S. Makwana, - IAS, Principal Resident Commissioner and a Cash Prize from Hon'ble Mr. Ashish Vachani - IAS, Resident Commissioner, on behalf of the Government of Tamil Nadu.

# அருந்ததியர் வரலாறு குறித்த ஆய்வு நூலை எழுதிய தில்லி பேராசிரியருக்கு தமிழக அரசு விருது

நமது சிறப்பு நிருபர்

**புது தில்லி, நவ24:** தமிழகத்தில் உள்ள அருந்ததியர் வாழ்க்கை வரலாறு குறித்த ஆய்வு நூலை எழுதிய தில்லி ஸ்ரீ வெங்கடேஸ்வரா கல்லூரியின் தமிழ்த்துறைபேராசிரியர் முனைவர் ச.சீனிவாசனுக்கு தமிழக அரசின் விருது புது தில்லி தமிழ்நாடு இல்லத்தில் நடந்த நிகழ்ச்சி ஒன்றில் செவ்வாய்க்கிழமை வழங்கப்பட்டது.

தமிழக அரசின் முதன்மை உள்ளுறை ஆணையர் ஹிதேஷ் குமார் எஸ் மக்வானா தமிழக அரசின் பாராட்டுப்பத்திரத்தை பேராசிரியர் சீனிவாசனிடம் வழங்கினார். பரிசுக்கான ரொக்க தொகையை காசோலையாக தமிழ் நாடு இல்ல உள்ளுறை ஆணையாளர் ஆஷிஷ் வச்சானி தமிழக அரசின் சார்பாக வழங்கினார். இந்தநிகழ்ச்சியின் போது தமிழ்நாடு இல்ல இணை உள்ளுறை ஆணையாளர் .ச .உ .சின்னத்துரை, உதவி சம்பளக்கணக்கு அலுவலர் சீனிவாசன், நூலகர் மாதவன் மற்றும் பணியாளர்கள் கலந்து கொண்டனர்.

தமிழக அரசின் ஆதி திராவிடர் நலத்துறையின் கீழ் இயங்கி வரும் 'ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் கலை இலக்கிய மேம்பாட்டுச் சங்கம்' சார்பில் ஆண்டுதோறும் சிறந்த நூல் ஆசிரியர்களுக்கு விருது வழங்கப்படுகிறது. இதில் ஆதி திராவிடர் வகுப்பைச் சேர்ந்த ஆசிரியர்கள் பத்து பேருக்கும் ஆதி திராவிடர்கள் குறித்து எழுதும் ஆதிதிராவிடர் அல்லாத ஆசிரியர் ஒருவருக்கும் விருது வழங்கப்படுகிறது.



தமிழக அரசின் பாராட்டுப்பத்திரத்தை பேராசிரியர் சீனிவாசனக்கு அளிக்கும் தமிழக அரசின் முதன்மை உள்ளுறை ஆணையர் ஹிதேஷ் குமார் எஸ் மக்வானா. உடன்: தமிழ்நாடு இல்ல உள்ளுறை ஆணையாளர் ஆஷிஷ் வச்சானி.

இதில் 2017,2018 – ஆம் ஆண்டுகளில் தேர்வான சிறந்த நூல் ஆசிரியர்களுக்கு தற்போது விருது வழங்கப்பட்டது. இதில் 2018 – ஆம் ஆண்டு படைப்பிற்கு ஆதிதிராவிடர் அல்லாத ஆசிரியருக்கான விருது, தில்லி ஸ்ரீ வெங்கடேஸ்வரா கல்லூரியின் தமிழ்த்துறை பேராசிரியர் முனைவர் ச.சீனிவாசனுக்கு வழங்கப்பட்டுள்ளது. இவரது 'தமிழக அருந்ததியர் வரலாறும் வாழ்வும்' நூல் சிறந்த படைப்பாக தேர்வு செய்யப்பட்டு, இதற்கான பாராட்டுப் பத்திரமும், இப்படைப்பினை நூலாக வெளியிட ரூ.40,000 ஊக்கத்தொகையாகவும் கொடுக்கப்பட்டுள்ளது.

தமிழக முதல்வரால் இந்த விருதுகள் வழங்கப்படும். கரோனா நோய்த்தொற்றின் காரணமாகதில்லியில் நடந்த நிகழ்ச்சியில் சீனிவாசனுக்கு விருது வழங்கப்பட்டது.

விருது பெற்ற பேராசிரியர் ச. சீனிவாசன் கூறுகையில், 'பொதுவாக அருந்ததியர்கள், ஆந்திரம், கர்நாடகம் போன்ற மாநிலங்களிலிருந்து வந்தவர்களாக சொல்லப்படுவதுண்டு. ஏழு பிரிவுகளைக் கொண்ட அருந்ததியர்கள் பல்வேறு பெயர்களில் அழைக்கப்படுகின்றனர்.

உண்மையிலேயே இவர்கள் ஆதி தமிழர்கள். வறட்சி காரணமாக அண்டை மாநிலங்களான ஆந்திரம், கர்நாடகத்துக்கு வேலைவாய்ப்புகளுக்குசென்றுதிரும்பியவர்கள். இதற்கான ஆதாரங்கள் தமிழக கல்வெட்டுகள், செப்பேடுகள், இலக்கியங்களில் உள்ளன. இவைகளை ஆய்வு செய்து தமிழக அரசிடம் வழங்கப்பட்டது. இதற்கு விருது கொடுக்கப்பட்டுள்ளது. தற்போது தமிழக அரசு அளிக்கும் ரூ.40,000 –த்தைக் கொண்டு ஏற்கனவே சமர்பிக்கப்பட்ட ஆய்வை நூலாக வெளியிடுவேன் என்றார்.



Dr. S. Seenivasan,
Associate Professor,
Department of Tamil,
Sri Venkateswara College
New Delhi-21. .